# கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2012

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 மார்ச் 06 ஆந் திகதி இடம்பெற்ற ஏலத்தில் அகற்றப்பட்டிருந்த 98 சொத்து விடயங்கள் இனங்காணப்பட்டு கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் படி இறுதியிருப்பாக களஞ்சிய முற்பணக் கணக்கின் மீதியான ரூபா 1,311,618 காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் படி இருப்பு மீதி ரூபா 1,823,731 என்பது வெளிப்பட்டதுடன் ரூபா 512,113 தொகையான வேறுபாட்டிற்கான காரணத்தைப் பரீட்சித்து கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டின் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த மெய்மையாய்வு மீதிக்கும் இருப்பு மீதிக்கும் இடையில் நிலவிய ரூபா 1,155,719 ஆன மீதி மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

பல்கலைக்கழங்கள் தாபன விதிக்கோவையின் 20 ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் கல்விசார் பதவியணியினரின் வருகைகள் மற்றும் வெளிச் செல்கைகளை உறுதிப்படுத்துவதற்காகவும் தாபன விதிக்கோவையின் 10 ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவின் பிரகாரம் விடுமுறைகளை

உறுதிப்படுத்துவதற்காகவும் தொடர்புடைய பதிவேடுகள் பேணிவரப்படாமை காரணமாக மீளாய்வாண்டில் கல்விசார் பதவியணியினருக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 9,333,000 சம்பளம் மற்றும் படிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.2.3 செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு வெளிவாரி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 23,932 தொகை 04 முதல் 08 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக மாற்றமின்றிக் காணப்படுவதுடன் அம்மீதியினை தீர்ப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரண்டு நிறுவனங்களினால் 01 முதல் 05 வரையான ஆண்டு காலமாக அறவிடப்படாதுள்ள மீதி ரூபா 18,357,104 ஆகும்.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2011 ஏப்ரல் 07 ஆந் திகதிய 45 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் (04) (அ) மற்றும் (ஆ) பந்திகள் | ஆராய்ச்சிப் படிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெறும் உத்தியோகத்தர்கள்/ விரிவுரையாளர்கள் ஆராய்ச்சிப் பிரேரணைகளை சிபார்சுச் சபை ஏற்றுக்கொள்ளும் ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டு ஆராய்ச்சிப் படிகளை செலுத்த வேண்டிய போதிலும், அவ்வாறான குழுக்களின் அங்கீகாரமின்றி 2011 ஆம் ஆண்டில் ரூபா 115,974 படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சிகளின் முன்னேற்றம் தொடர்பில் திருப்திப்படாது ரூபா 329,831 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) தேசிய நூலகங்கள் மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையின் 2004/புச/1 ஆம் இலக்க அறிவுரைச் சுற்றறிக்கையின 3.1 | 2006 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் 2012 யூன் 30 ஆந் திகதி வரை நூலகப் புத்தகங்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

ஆம் உப பிரிவு

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டுக்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 51,315,198 பற்றாக் குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 63,236,345 ஆக காணப்பட்டது. மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 62,750,000 அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுத்த பின்னர் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 11,434,802 மிகையாக மாற்றமடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 52,117,072 அரசாங்க மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 11,119,273 ஆகியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் ரூபா 22,554,075 சாதகமான நிலைக்கு அரசாங்க மானியம் ரூபா 10,632,928 ஆல் அதிகரித்திருந்தமை மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 8,753,670 ஆல் அதிகரித்திருந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பல்கலைக்கழகங்கள் ஆளுகைச் சபையில் பாட விதானத்தினை அங்கீகரித்துக் கொள்ளாது மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் 2006 மார்ச் மாதத்தில் அந்த நிறுவகத்தில் பாடநெறிகளைப் பயிலும் மருத்துவர்களிற்காக கணனிப் பிரயோகத்தில் நிபுணத்துவச் சான்றிதழ் (Certificate of Competence in Computer Application) பாடநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டு பல்கலைக்கழக சிபார்சுச் சபையின் அங்கீகாரமின்றி சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

### 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மை

மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்காக எட்டு மாடிகளைக் கொண்ட ''மருத்துவக் கற்கைகள் வள மையம்'' ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2008 பெப்ரவரி 22 ஆந் திகதியளவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீடு அவ்வப்போது மாற்றப்பட்டு தொடர்புடைய நிறுவனங்களின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டு வரப்படுகின்றது.

**3.3 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்**

2012 ஆம் ஆண்டினதும் 2013 இன் முதலாம் காலாண்டினதும் உபரசாரச் செலவினம் தொடர்பான மாதிரிகளின் பரிசோதனையில் கற்கைகள் பிரிவில் நடாத்தப்பட்ட கூட்டங்களிற்காக வழங்கப்பட்ட உடனடி உணவுகளிற்கு கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் பொய்யாக இறப்பர் இலச்சினைகளை மாற்றியமைத்து போலியான கையொப்பங்களை இட்டு தொகைகளை மாற்றி 12 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 116 சிட்டைகளின் மூலம் ரூபா 286,284 தொகை மோசடியாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**3.4 இழப்புக்கள் மற்றும் சேதங்கள்**

மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனம் 2009 செப்தெம்பர் 17 ஆந் திகதி தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் கட்டுப்பாட்டாளரால் அனுமதியின்றி எடுத்துச்செல்லப்பட்டு விபத்துக்குள்ளாக்கப்பட்டிருந்தது. இந்த விபத்தினால் ரூபா 338,354 இழப்பு ஏற்பட்டிருந்தமை காரணமாக பாதுகாப்புச் சேவைக்காகச் செலுத்தவேண்டியிருந்த ரூபா 148,686 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 189,668 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் 2013 ஏப்ரல் 03 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்கள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட்டு 2013 செப்தெம்பர் 18 ஆந் திகதி வரைவு அறிக்கை வழங்கப்பட்டது. வரைவு அறிக்கையின் மூலம் ரூபா 215,274,581 இற்கான கணக்கீட்டுக் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 214,762,468 இற்கான கணக்கீட்டுக் குறைபாடுகள் சீராக்கப்பட்டு திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2013 ஒக்தோபர் 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளிற்கு அப்பால் மேலும் இவ்வாறான குறைபாடுகள் காணப்படுதலை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது.

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூலை 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில்

உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை உள்ளடக்கி 2011 – 2015 காலப்பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் 87 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், 80 பாடநெறிகளிற்காக பாதீட்டு மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் பாடநெறிகளிற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களை வெவ்வாறாக இனங்காணக்கூடியவாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்காமை, ஒவ்வொரு பாடநெறி தொடர்பிலும் முகாமைத்துவத் தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக செலவினக் கட்டுப்பாட்டினை பிரயோகிக் முடியாமை போன்றன கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) முற்பணங்கள் கட்டுப்பாடு

(இ) கடன்பட்டோர் கட்டுப்பாடு

(ஈ) இருப்பு மற்றும் பொருட் பதிவேட்டுக் கட்டுப்பாடு

(உ) நூலகக் கட்டுப்பாடு

(ஊ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு